# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம், புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை, சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
தொலைபேசி எண் 24312841.

**வழக்கு எண். 11618/விசாரணை/2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள். 25.9. 2009</u> (திருவண்ணாமலை)**

| | |
|---|---|
| **முன்னிலை** | **திரு தி சீனிவாசன், எம்.எஸ்சி.<br>மாநில தகவல் ஆணையர்.** |
| **மனுதாரர்:** | திரு ஆர் பாலகிருஷ்ணன்<br>220, ரோடு தெரு, நம்பேடு கிராமம் & அஞ்சல்<br>போளூர் தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம். |
| **பொது அதிகார அமைப்பு:** | பொதுத் தகவல் அலுவலர்<br>ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து<br>ராஜ் ஆணையர் அலுவலகம்<br>பனகல் கட்டிடம் சைதாப்பேட்டை<br>சென்னை 15. |

மனுதாரர் திரு ஆர் பாலகிருஷ்ணனும், பொது அதிகார அமைப்பின் சார்பாக ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் அலுவலகத்திலிருந்து பொதுத் தகவல் அலுவலர் வரவில்லை. ஆனால் அவர் சார்பாக திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து) அவர்கள் இன்று (25.9.09) இவ்வாணையத்தால் திருவண்ணாமலையில் நடத்தப்பட்ட விசார**ணைக்கு வந்திருந்தார்.**

மனுதாரர் 4.3.09 அன்று ஒரு குறிப்பிட்ட விசாரணை செய்யப்பட்ட கோப்பினுடைய அனைத்துப் பக்கங்களின் நகல்கள் கேட்டு மனு செய்துள்ளார். மனுதாரருக்கு உரிய தகவல்கள் கிடைக்காததால் 16.4.09 அன்று மேல் முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 20.5.09 அன்று செய்த மேல் முறையீடு மனு இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் சம்பந்தப்பட்ட கோப்பின் நகல்கள் கிடைக்கப்பெற வில்லை என்று தெரிவித்தார். இது சம்பந்தமாக பொதுத் தகவல் அலுவலரின் சார்பாக வந்திருந்த திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியரின் நேர் முக உதவியாளர் (பஞ்சாயத்து) உரிய கோப்பின் நகல்கள் விரைவில் வழங்கப்படும் என்று தெரிவித்தார். மனுதாரருக்கு தகவல் வழங்கப்படவில்லை என்றும் முடிவு செய்து கீழ்க்கண்ட ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

மனுதாரர் கேட்ட உரிய தகவல்களை இவ்வாணை பெறப்பட்ட 15 தினங்களுக்குள் அளித்து அதன் விவரத்தினை ஆணைத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலர், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் அலுவலகம், சென்னை 15, அவர்களுக்கு ஆணையிடப்படுகிறது.

இன்றைய விசாரணைக்கு நேரில் வராமல், உரிய தகவல்களை மனுதாரருக்கு இது வரை தகவல் வழங்கப்படாதற்கு சம்பந்தப்பட்ட பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச்சட்டத்தின் பிரிவு 20 (1) ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கு விளக்கம் கேட்டு அவ்விளக்கத்தினை இவ்வாணயத்திற்கு இவ்வாணை கிடைத்த 30 நாட்களுக்குள் அனுப்பி வைக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர் , சென்னை 15 கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

**மாநில தகவல் ஆணையம்**
**ஒப்புதல் அளிக்கப்பட்ட நாள் 15.9.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

உதவிப் பதிவாளர்

ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் ஆணையர்
பனகல் மாளிகை
சைதாப்பேட்டை
சென்னை 15

.

மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பஞ்சாயத்து)
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்
திருவண்ணாமலை

திரு ஆர் பாலகிருஷ்ணன்
220, ரோடு தெரு,
நம்பேடு கிராமம் & அஞ்சல்
போலூர் தாலுகா,

திருவண்ணாமலை மாவட்டம்.